பள்ளிக் கல்வித் துறை.
தலைமைச்செயலகம்,
சென்னை-600 009.

கடிதம் (நிலை) எண். 238/ப.க.5(1)/2023-1, நாள்: 13 .12.2023

அனுப்புநர்
திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

**பெறுநர்**

பள்ளிக்கல்வி இயக்குநர்,
பள்ளிக்கல்வி இயக்ககம்,
சென்னை – 600 006.

அய்யா,

**பொருள்:** பள்ளிக்கல்வி – பள்ளிக்கல்வி இயக்ககத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அனைத்துப்பாட பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்பிட அனுமதி கோரியது – அறிவுறுத்தல்கள் வழங்குவது - தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக்கல்வித்துறை, நாள்:17.12.2021.
2. தங்களது கடித ந.க.எண்:3316/சி2/இ1/2022, நாள்:7.11.2023.

........

பார்வை 2ல் காணும் தங்களது கருத்துருவின் மீது பின்வருமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகிறது.

(i) தங்களது 7.11.2023 நாளிட்ட கருத்துருவில் கோரப்பட்ட 757 பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட அனுமதி கோரிய தங்களது கருத்துருவை தற்போது ஏற்க வழிவகையில்லை.

(ii) ஒருங்கிணைந்த நிதி (ம) மனித வள மேலாண்மை அமைப்பால் (IFHRMS) அனுமதிக்கப்பட்ட அளவைவிட உபரியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை, அதிகமாக காலியாக உள்ள மாவட்டங்களில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையுடைய பள்ளிகளுக்கு

பணிநிரவல் (deployment) செய்யப்பட வேண்டும். அவ்வாறு பணிநிரவல் செய்யப்பட்ட விவரத்தை பின்வரும் அட்டவணையில் பூர்த்தி செய்து பணிநிரவல் முடிவுற்ற 15 தினங்களுக்குள் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

| வ.எண் | உபரி ஆசிரியர் பணியிடங்கள் கண்டறியப்பட்ட மாவட்ட வாரியான விவரம் | உபரி ஆசிரியர் பணிநிரவல் (deployment) செய்யப்பட்ட மாவட்ட வாரியான விவரம் | முன்னுரிமை மாவட்டங்களுக்கு பணிநிரவல் செய்யப்பட்ட மாவட்ட வாரியான விவரம் | 500 மாணவர்கள் எண்ணிக்கையுடை பள்ளிக்கு பணிநிரவல் செய்யப்பட்ட விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(iii) பிரதி ஆண்டு ஜீன் 1ம் நாளன்று உள்ளவாறு ஆசிரியர் பணியிடங்களை கணக்கில் கொண்டு பிரதி ஆண்டு ஜீன் 30-க்குள் பணிநிரவலை (deployment) முடித்து பிரதி ஆண்டு ஜீலை 1ம் நாளன்று மேலே பத்தி (ii)ல் உள்ள அட்டவணையில் தெரிவித்துள்ள விவரங்களுடன் காலிப்பணியிட மதிப்பீட்டினை அரசு அனுமதிக்கு அனுப்ப வேண்டும்.

(iv) தற்போது பட்டதாரி ஆசிரியர் 2000 பணியிடங்களை நிரப்பிக் கொள்ள அனுமதிக்கப்பட்டதில் தேர்வாகும் தேர்வர்களை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அதிகமாக காலியாகவுள்ள கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட விவரத்தை பின்வரும் அட்டவணையில் பூர்த்திசெய்து நியமனம் செய்யப்பட்ட 15 தினங்களுக்குள் அரசிற்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

| வ.எண் | த.நா.ஆ.தே.வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட தேர்வர்களின் எண்ணிக்கை | தேர்வர்களை நியமனம் செய்யப்பட்ட மாவட்ட வாரியான எண்ணிக்கை | தேர்வர்களை முன்னுரிமை மாவட்டங்களுக்கு நியமனம் செய்யப்பட்ட மாவட்ட வாரியான விவரம் | தேர்வர்களை 500 மாணவர்கள் எண்ணிக்கையுடையபள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(v) மேலும் மேலே பத்தி IV-இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமை மாவட்டங்களில் தேர்வர்களை முதலில் நியமனம் செய்யும் போதே குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இம்மாவட்டங்களில் பணிபுரிய வேண்டும் எனும் நிபந்தனையை நியமன ஆணையில் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட வேண்டும்.

(vi) பார்வை 1-இல் காணும் அரசாணையின் பத்தி 7-இல் ஆசிரியர் பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெறுதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பணிநிரவல் (deployment) நடைமுறை

பின்பற்றப்பட்ட பின்னரே ஆசிரியர் பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(vii) மேற்காணும் அறிவுறுத்தல்களை தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. மீறுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தங்கள் நம்பிக்கையுள்ள

13/12/23

அரசு செயலாளருக்காக